<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 23.02.2023 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

27) 1, 7, 9, 10, 13 ஆகிய பிரதிவாதிகளுக்கு அவர்களுடைய நிலங்களுக்கு சென்றடைய எந்த சர்வே எண் வழியாக தடம் உள்ளது என்றால், ச.எண்.248/1A3 ன் வழியாக வடக்கு புறமாக தடவழி உள்ளது.

28) இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட வந்தபோது, அவரிடம் மேற்படி சர்வே எண்.248/1A3 ல் வடக்குபுறமாக உள்ளதாக சொல்லும் தடவழியை நான் காண்பித்தேனா என்றால், இல்லை.

29) தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட Ex.C1 வரைபடத்தில் வடக்குபுறமாக அவ்வாறு ஏதேனும் வழித்தடம் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. நான் சொல்வது போல் அவ்வாறு ச.எண்.248/1A3 ல் வடக்குபுறமாக எந்த வழித்தடமும் இல்லை என்றாலும், அவ்வாறு உள்ளதாக இவ்வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

30) என்னால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு இவ்வழக்கின் பிரதிவாதிகளுள் சிலர் அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை எனக்கு எதிராகவும், இவ்வழக்கின் மற்ற வாதிகளுக்கு எதிராகவும், தாக்கல் செய்து அதிலும் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தள்ளார் என்றால், சரிதான்.

31) அவ்வாறு மேற்படி வழக்கிலாவது நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது அவரிடம் ச.எண்.248/1A3 ல் வடக்குபுறமாக வழித்தடம் உள்ளது குறித்து காண்பித்தேனா என்றால், காண்பித்தேன். ச.எண்.248/1A3 க்கு வடக்குபுறம் யாருடைய நிலம் உள்ளது என்றால், பழனிசாமியின் நிலமும், பெருமாளின் நிலமும் உள்ளது.

32) மேற்படி தடம் பிரதிவாதிகளான பழனி வகையறா வாங்கிய நிலத்தில் உள்ளது என

நான் சொல்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் அவ்வாறு நான் சொல்வது போல் ச.எண்.248/1A3 ன் வடக்குபுறத்தில் ஏதேனும் வழித்தடம் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் ஆணையரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தின் சான்று நகல் **பி.வா.சா.ஆ.1 (Ex.B1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

33) சிந்தாமணியூர் செல்லும் தார்சாலை வடக்கு தெற்காக செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தார்சாலைக்கு மேற்குபுறம் ச.எண்.248/1A3 அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 க்கு தெற்காக 10 அடி அகல பாதை கிழமேலாக செல்கிறது என்றால், சரிதான். ஆனால் அது 10 அடி அகல வழித்தடம் கிடையாது. அது சுமார் 3 அடி அகலமுள்ள மண்பாதை ஆகும்.

34) மேற்படி மண்பாதையை அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையரும் தற்போது இவ்வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையரும் பார்வையிட்டுள்ளனர் என்றால், சரிதான். அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நாங்கள் வழக்கறிஞர் நியமிப்பதற்கு முன்பே நீதிமன்ற ஆணையர் வந்து தடத்தை பார்வையிட்டார். அவ்வாறு வழக்கறிஞர் நியமிப்பதற்கு முன்பே ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட்டது தொடர்பாகவும், அவர் தாக்கல் செய்த அறிக்கை தொடர்பாகவும், பின்னிட்டு ஏதேனும் ஆட்சேபனை செய்தோமா என்றால், இல்லை.

35) தற்போது இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் மேற்படி மண்பாதை எந்த சர்வே எண்ணில் செல்வதாக காண்பித்துள்ளார் என்றால், ச.எண்.248/2 ல் செல்வதாக காண்பித்துள்ளார். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் மேற்படி பாதையை மண்பாதை என்றுதான் காட்டியுள்ளாரா என்றால், ஆம். மண்பாதை உள்ளதாக காட்டியுள்ளார்.

36) நான் சொல்வது போல் அவ்வாறு ச.எண்.248/2 ல் 3 அடி அகலத்தில் எந்த மண்பாதையும் இல்லை என்றாலும், அங்கு 10 அடி அகலத்தில் மண்பாதை உள்ளது என்றாலும், வழக்கிற்காக நான் 3 அடி அகலத்தில் சிறிய மண்பாதை உள்ளது என

பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

37) ச.எண்.248/2 ற்குரிய வருவாய் ஆவணங்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால், அம்மாசி என்பவரது பெயரில் மட்டும் உள்ளது. மேற்படி 10 அடி அகல மண்பாதைக்கு வடக்குபுறமாக ச.எண்.248/1A3 உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 ல் தான் என் சகோதரர் 1ம் வாதி பெரியண்ணனின் கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். ஆனால் அது கூரை வீடு அல்ல, அட்டை வீடு.

38) 1ம் வாதி பெரியண்ணனின் கூரை வீட்டிற்கு தெற்குபுறம் எனக்கு சொந்தமான தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். என் சகோதரர் பெரியண்ணனின் கூரை வீட்டிற்கு எந்தபுறம் தலைவாசல் உள்ளது என்றால், தெற்குபுறம் உள்ளது. என் தொகுப்பு வீட்டிற்கு எந்தபுறம் தலைவாசல் உள்ளது என்றால், கிழக்குபுறம் உள்ளது.

39) சிந்தாமணியூர் செல்லும் தார் சாலையை ஒட்டி ச.எண்.248/1A3 ல் மேற்குபுறமாக ஒரு மின் கம்பமும், அதற்கு மேற்குபுறமாக நடுக்காட்டில் மற்றொரு மின்கம்பமும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 க்கு மேற்குபுறமாக ஒரு கல்கட்டு உள்ளது என்றால், சரிதான். மேற்டி கல்கட்டுக்கு மேற்குபுறமாக 4 அடி அகலத்தில் ஒரு நடைபாதை செல்கிறது என்றால், இல்லை. அது விவசாய நிலம்.

40) அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வந்த சமயத்தில் மேற்படி 4 அடி அகல தடத்தில் செல்ல இயலாதவாறு வடக்குபுறமாக கல், கண்ணாடி, முள் போன்றவற்றை போட்டு தடத்தை மறித்திருந்தோம் என்றால், சரியல்ல. அவ்வாறுதான் ஆணையாளர் தன் அறிக்கையில் கூறியுள்ளார் என்றாலும், நாளது தேதி வரை மேற்படி அறிக்கை தொடர்பாக எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால், சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.